**செய்தி வெளியீடு எண்: 218** **நாள்: 28.03.2018**

தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல் துறை மற்றும்
சர்தார் வல்லபாய் படேல் சர்வதேச ஜவுளி மற்றும் மேலாண்மைக் கல்லூரி இணைந்து
நடத்தும் துறைசார் பயிற்சிபட்டறை – மெடிக்கல் டெக்ஸ்டைல்ஸ் (Medical Textiles)
05.04.2018 to 08.04.2018

கோவை சர்தார் வல்லபாய் படேல் ஜவுளி கல்லூரியும் தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல் துறையும் இணைந்து ஜவுளித் தொழில்நுட்பத் துறைக்கும், ஜவுளித் தொழில்முனைவோருக்கும் உதவ பல்வேறு தொழில்நுட்ப உட்பிரிவுகளில் ஜவுளி பயிற்சிப்பட்டறைகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் தொடக்கவிழா கடந்த **10.03.2018** அன்று கோவை சர்தார் வல்லபாய் படேல் ஜவுளி கல்லூரியில் நடைபெற்றது.

இதன் தொடர்ச்சியாக, தொழில்நுட்ப ஜவுளித்துறையின் ஒரு உட்பிரிவான மெடிக்கல் டெக்ஸ்டைல்ஸ் பயிற்சிபட்டறை வரும் **05.04.2018** முதல் **08.04.2018** வரை நடைபெறவுள்ளது.

இப்பட்டறையில் தயாரிப்புமுறை, தொழில்நுட்பம், இயந்திரங்கள், தரநிலைகள், சந்தை தேவைகள், சந்தைப்படுத்துதல் முதலிய தலைப்புகளில் பங்கேற்பாளர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலும் பங்கேற்பாளர்கள் தொழிற்சாலைகளைப் பார்வையிட ஏற்பாடு செய்யப்படும் பங்கேற்பாளரிடம் துறைசார்ந்த கேள்வித்தொகுப்புகள் வழங்கப்பட்டு மருத்துவமனை, விநியோகஸ்தர்கள் மற்றும் பயனாளிகளிடம் களஆய்வு செய்ய அறிவுறுத்தப்படுவர்.

புதிய பொருட்கள் உற்பத்தி, SWOT ஆராய்ச்சி, புதிய வியாபாரத்தில் நுழைவதற்கான பயிற்சிகள் வழங்கப்படும்.

அடுத்த பயிற்சிகளில் Agro Tech/Home Tech மற்றும் Indu Tech/Pack Tech அதன் உட்பிரிவுகள் சார்ந்த பட்டறைகள் நடைபெறும்.

பல்வேறு தொழிற்சாலைகள், ஆராய்ச்சி நிறுவனங்கள், உயர்கல்வி நிலையங்களிலிருந்து தொழிலதிபர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் பேராசிரியர்கள் தங்கள் அனுபவங்கள் மற்றும் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள உள்ளனர்.

டெக்னிக்கல் டெக்ஸ்டைல்ஸ் துறையில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பத்தைக் கற்றுக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பை வழங்குவதற்கும் ஒரு தொழிலதிபராக ஆவதற்கும் இப்பயிற்சிகள் பயன்படும்.

**Key Points:**

- Programme Date: 05.04.2018 to 08.04.2018
- Maximum No. of Participants: 50
- Target Participants: Existing and Budding Entrepreneurs in Medical Textile Field
- No Registration Fee (Sponsored by State Government)
- Venue: SARDAR VALLABHBHAI PATEL INTERNATIONAL SCHOOL OF TEXTILES AND MANAGEMENT,1483, Avinashi Road, Peelamedu, Coimbatore- 641004, 0422-2571675, 2592205
- Contact: 8870479671/9791903909
- For application: www.svpistm.ac.in

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**